கிட்டத்தட்ட 1,000 என்ற அளவிற்கு இருக்கின்றன. சுமார் 5,000 பேர் அங்கே குடியிருந்து வருகிறார்கள். அங்கு இடம் இருக்கிறது. ஆனால், மயானம் இல்லை. எனவே, அந்த இடத்திலே மயானம் ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நாட்களுக்கு முன்பு சேலத்தில் இருக்கின்ற அத்தனை அடுக்குமாடிக் குடியிருப்புகளையும் நேரடியாகச் சென்று ஆய்வு செய்தோம். அங்கே பல இடங்களிலே குடியிருப்புகளை இடித்துக் கட்ட வேண்டிய ஒரு கட்டாயம்தான் இருக்கிறது. ஓர் இடத்திலே 116 வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. ஆனால், 4, 5 ஆண்டுக் காலமாக பூட்டி வைக்கப்பட்டிருக்கின்றன. காரணம், அங்கு யாரும் வாடகைக்கு வரவில்லை. அதற்கெல்லாம் என்ன மாற்று ஏற்பாடு என்று பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

அதேபோல, நீங்கள் கேட்கின்ற அந்த அடுக்குமாடிக் குடியிருப்பின் பக்கத்திலே மயானம் அமைப்பதற்கு வீட்டு வசதி வாரியத்தினுடைய இடம் இருந்தால் அதைக் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 96, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. தாமோதரன், மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

96—

மதிப்புக் கூட்டும் தொழிற்சாலை

***1765—திரு. செ. தாமோதரன்:**

மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிணத்துக்கடவில் தக்காளிக்கான மதிப்புக் கூட்டும் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

2022 ஏப்ரல் 12]

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கோவை மாவட்டம், கிணத்துக்கடவு தொகுதியில், தக்காளி மதிப்புக் கூட்டும் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. தாமோதரன் அவர்கள்.*

திரு. செ. தாமோதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிணத்துக்கடவில் தினசரி காய்கறிச் சந்தை ஒன்று உள்ளது. அது, அந்தப் பகுதியிலேயே மிகப் பெரிய சந்தையாகும். கிணத்துக்கடவு பகுதியைச் சுற்றியுள்ள விவசாயிகள் பயிரிடுகின்ற தக்காளியை அந்தச் சந்தைக்குத்தான் விற்பனைக்குக் கொண்டு வருகிறார்கள். அதோடுமட்டுமல்லாமல், மற்ற பகுதிகளிலிருந்தும் தக்காளி அந்தச் சந்தைக்கு வந்து சேர்கிறது. இதனால் அந்தச் சந்தைக்கு தக்காளி வரத்து அதிகமாக உள்ள நேரத்தில் விலை மிகவும் வீழ்ச்சியடைகிறது. அந்த நேரத்தில், தக்காளி சாகுபடி செய்கின்ற விவசாயிகள் தங்களது தோட்டத்தில் உள்ள தக்காளிச் செடிகளில் இருக்கும் தக்காளியைப் பறிக்காமலேயே விட்டுவிடுகின்றார்கள். அதனால், தக்காளி அழுகும் நிலைக்குச் சென்றுவிடுகிறது. ஒருசிலர் அதனை சந்தைக்குக் கொண்டுவந்து, அங்கு விற்காமலேயே கீழே கொட்டுவதும், மாடுகளுக்குப் போடுவதுமான நிலைதான் ஏற்படுகின்றது. இதனால், தக்காளி சாகுபடி செய்கின்ற விவசாயிகள் பெரும் நஷ்டம் அடைகின்றார்கள். என்னுடைய பகுதியைச் சேர்ந்த தக்காளி பயிரிடுகின்ற விவசாயிகள், பெரும்பாலும் சிறு விவசாயிகளாக உள்ளார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுபற்றி பரிசீலனை செய்து, கிணத்துக்கடவு தொகுதியில் தக்காளி மதிப்புக் கூட்டும் தொழிற்சாலை ஒன்றை அமைத்துக் கொடுக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், கிணத்துக்கடவு வட்டாரத்தில், தக்காளி சராசரியாக 325.93 ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்படுகிறது. இதிலிருந்து, 8,150 மெட்ரிக் டன் தக்காளி சாகுபடி செய்யப்படுகிறது. சாகுபடி செய்யப்படும் தக்காளி பெரும்பாலும் கிணத்துக்கடவு, நாச்சிபாளையம் மற்றும் சுந்தராபுரம் ஆகிய பகுதிகளில் தனியார் வியாபாரிகளால் மொத்த விலைக்கு கொள்முதல் செய்யப்பட்டு, சந்தையில் விற்கப்படுகின்றது. சாகுபடியாகும் தக்காளி அனைத்தும் உள்ளூர் பயன்பாட்டிற்கே போதுமான அளவில் உள்ளது. எனவே, கிணத்துக்கடவு தொகுதியில் தக்காளி மதிப்புக் கூட்டும் தொழிற்சாலை அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. தாமோதரன் அவர்கள்.

திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிணத்துக்கடவு சந்தைக்கு வருகின்ற தக்காளி, கிணத்துக்கடவு பகுதிகளிலிருந்து மட்டுமல்லாமல், நாச்சிபாளையம், சுந்தராபுரம், பொள்ளாச்சி மற்றும் உடுமலை ஆகிய பகுதிகளில் உள்ள காய்கறி சந்தைகளிலிருந்தும் கொண்டுவரப்படுகின்றது. ஏனென்றால், கிணத்துக்கடவு தக்காளி சந்தைக்கு வியாபாரிகள் அதிகளவு வருகின்றார்கள். அதோடு மட்டுமல்லாமல், அங்கிருந்து வெளி மாநிலங்களுக்கும் தக்காளி கொண்டு செல்லப்படுகின்றது. அதனால், அதிகளவில் தக்காளி சந்தைக்குக் கொண்டுவரும்போதுதான் விலைவீழ்ச்சி என்பது ஏற்படுகின்றது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அங்கு ஒரு தக்காளி பதனிடும் தொழிற்சாலையை அமைத்துக் கொடுத்தால், விவசாயிகளுக்கு உதவியாக இருக்குமென்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். கிணத்துக்கடவு பகுதியில், அந்தச் சந்தைக்கு உள்ளேயே ஓர் இடம் உள்ளது. அங்கு குளிர்சாதனக் கிட்டங்கி ஒன்று உழவர் நலத் துறையின் மூலமாக, அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. அதனால், அரசின் மூலமாக செய்வது மிகவும் எளிதாக இருக்கும். இடமும், குளிர்சாதனக் கிட்டங்கியும்

2022 ஏப்ரல் 12]

உள்ளது. அங்கு ஒரு தொழிற்சாலை அமைப்பது என்பது அரசுக்கு எளிதாக இருக்குமென்று நான் நினைக்கின்றேன். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இதனை மறுபரிசீலனை செய்து, அங்கு தக்காளியைப் பதப்படுத்துகின்ற ஒரு தொழிற்சாலையை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று, மாண்புமிகு அமைச்சர் அவர்களை, மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு புதிய தொழில் தொடங்குபவர்களுக்கு மானியத்துடன்கூடிய சுய வேலைவாய்ப்புக் கடன் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. கிணத்துக்கடவு தொகுதியைப் பொறுத்தவரை, இதுவரை, இத்துறையின்மூலம் செயல்படுத்தப்படும் சுய வேலைவாய்ப்புக்கடன் திட்டத்தின்கீழ், கடந்த நிதியாண்டில், *27* நிறுவனங்களுக்கு ரூ.*1* கோடியே *56* இலட்சம் மானியமாக வழங்கப்பட்டு, தொழில் தொடங்கப்பட்டுள்ளது. அதேபோல, முதலீட்டு மானியத் திட்டத்தின்கீழ், கடந்த நிதியாண்டில், *9* குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.*83* இலட்சத்து *20* ஆயிரம் மானியமாக வழங்கப்பட்டு, தொழில்கள் நடைபெற்று வருகின்றன. ஆகவே, தக்காளியைப் பயன்படுத்தி, மதிப்புக் கூட்டுப் பொருட்களை தயார் செய்ய, தனியார் தொழில்முனைவோர்கள் முன்வந்தால், மானியத்துடன்கூடிய கடன் பெற்று, தொழில் தொடங்க அனைத்து வசதிகளும் செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குளிர்சாதனக் கிடங்கு தேவை என்று சொல்லியிருக்கின்றார்கள். ஆகவே, துறையின் சார்பில் ஆய்வு செய்யப்பட்டு, தேவைப்படின், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுசென்று, அதை, உடனே அமைத்துத் தருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 97, மாண்புமிகு உறுப்பினர் திரு.* A. *நல்லதம்பி, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*